DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 12/2025

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : இளங்கோ | Father's/Husband's Name : | கோவிந்தசாமி |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தை அளந்து அதை என்னிடம் ஒப்படைக்க வேண்டும். தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள், அளந்து பார்த்தால் தான் எவ்வளவு ஆக்கிரமிப்பு என்று தெரியும். தாவா சொத்து எனது அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்றால் எனக்கு தெரியவில்லை, அவர் பெயரில் பட்டா மட்டும் உள்ளது. எனது அப்பா 2023 ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள். எனது அப்பா தமிழ்நாடு வனத்துறையில் வனவராக (Forester) இருந்து ஓய்வு பெற்றார். அரசு பணியில் இருப்பவருக்கு பொதுவாக அரசு நிலம் ஒதுக்கீடு செய்யப்படாது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது அப்பாவிற்கு 4 பெண் பிள்ளைகள், 1 ஆண் பிள்ளைகள். தாவா சொத்தை எனது சகோதரரிகளுடன் சேர்ந்து கூட்டாகத் தான் அனுபவித்து வருகிறேன். 1 ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அப்பாவின் அத்தை 1 ம் பிரதிவாதி ராமரின் அப்பாவுக்கு முதல் மனைவி.

2) தாவா சொத்தை அளந்து கொடுக்கச் சொல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதற்கு அடங்கல் கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் என்னிடம் இருக்கிறது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து அனுபவம் செய்வதற்கான அனுபவ சான்று வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் PUC வரை படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பட்டா பாஸ்புக்கில் உள்ள புகைப்படம் 1 ம் பிரதிவாதி ராமருடையது தான். தாவா சொத்திற்கு மேற்கே ராமருக்கு

பாத்தியப்பட்ட தோட்டம் இருக்கிறது என்றால் சரியல்ல, அவரது அண்ணுக்கு தான் உள்ளது. எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்திற்கு மேற்கே பிரதிவாதிகள் வகையறாவினருக்கு பாத்தியப்பட்ட இடம் இருக்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதிகளின் உறவினர்களுக்கு இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

3) தாவா சொத்திற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு 1ம்பிரதிவாதி பெயரில் வழங்கிய பட்டாவில் மோசடியாக எனது அப்பா பெயர் சேர்க்கப்பட்டு தாவா சொத்தில் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இன்றுவரை பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றாலும் தாவா சொத்தில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல, நான் தான் சோளம் பயிர் செய்துள்ளேன். பாதி நிலத்தில் தான் பயிர் இருக்கிறது, மீதி நிலத்தில் அருவடை செய்துவிட்டோம். பிரதிவாதிகள் தான் சோளம் பயிர் வைத்து அதை அருவடை செய்து விற்பனை செய்து வருகிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் 1 பகுதியில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். அந்த ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி இந்தவழக்கில் பரிகாரம் கேட்டிருக்கிறேனா என்றால் கேட்டிருக்கிறேன்.

4) தாவா சொத்திற்கான பட்டா எனது அப்பா பெயரில் தவறாக வழங்கப்பட்டிருக்கிறது என்று பிரதிவாதிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனுவின் விசாணையின் போது மயிலாடும்பாறை வருவாய் ஆய்வாளர் கடந்த 25.11.2024ம் தேதி அறிக்கையில் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி ராமர் என்பவர் அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, எனக்கு தாமதமாகத் தான் தெரிய வந்தது, அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கிறேன். தாவா சொத்தின் விஸ்தீணரம் 4 ஏக்கர் 57 செண்டாகும். நானும் எனது தகப்பனாரும் எந்த காலத்திலும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும் 1ம் பிரதிவாதி தான் வல்லை வெட்டி தாவா சொத்தை இன்று வரை தனது

அனுபவத்தில் வைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றாலும் வழக்கிற்காக இந்த விபரங்களை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) எனது அப்பா 30.04.1997 ம் தேதி பணி நிறைவு பெற்றார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது அவருக்கு வயது 58 என்றால் சரிதான். பட்டா வழுங்கப்பட்ட காலத்தில் எனது அப்பா அரசு ஊழியராக இருந்ததால் அவர் பெயரில் Assignment பட்டா வழங்க வாய்ப்பில்லை என்றால் 1960 ம் ஆண்டிலிருந்தே வல்லை வெட்டி அனுபவம் செய்து வந்தார். தாவா சொத்திற்கான அசல் பட்டா பாஸ் புக் யாரிடம் இருக்கிறது என்ற விபரத்தை எனது அப்பா என்னிடம் சொன்னதில்லை. தாவா சொத்திற்கான அசல் பட்டா புக் 1ம் பிரதிவாதியிடம் இருந்ததால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது சகோதரிகளுக்கு பாத்தியம்உ ள்ளது என்பதால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் அவர்களுக்காகவும் தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி பால்ராஜ் பெயரில் கிணறு வெட்டி இலவச மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றால் என்னுடைய நிலத்தில் அந்த கிணறு இல்லை, தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் இருக்கிறது. இந்த வழக்கில் அவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன். நான் பொய்யான விபரங்களை கூறி இந்தவழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி :**

தாவா சொத்தின் எந்த பக்கத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள்என்றால் மேற்கு பக்கம். எவ்வளவு விஸ்தீரணம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் சுமார் 1 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருப்பார்கள்.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 04.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.04 13:07:23 +0530

District Munsif,
Aundipatti.